REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 ஜனவரி 27 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN

வரு. 89 இல. 23 | January 27, Wednesday, 2021 | 20பக்கங்கள் | 30/-

## மேல் மாகாணத்திலிருந்து வெளியேறுபவர்களுக்கு நாளை முதல் அன்டிஜன் பரிசோதனை

பொலிஸ் ஊடகப் பேச்சாளர்



03

மக்களை சிரமத்துக்குள்ளாக்க முடியாது;

# எரிபொருள் விலை அதிகரிப்பை தடுத்து நிறுத்திய ஜனாதிபதி

எரிபொருள் விலை திருத்தம் செய்வதற்கு எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில அமைச்சரவையில் யோசனையொன்றை முன்வைத்துள்ளார். எனினும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அமைச்சரவை அந்த யோசனைகளை நிராகரித்துள்ளது.

ஜனாதிபதி தலைமையில் Zoom தொழில் நுட்பத்தின் ஊடாக (25)அமைச்சரவை கூட்டம் நடைபெற்றது.

இதன் போது இந்த யோசனை முன்வைக்கப்பட்டது. எனினும் இந்த விலை திருத்தம் மூலம் மக்களை சிரமத்திற்குள்ளாக்க முடியாதென ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

முடியுமென்றால் எரிபொருளுக்காக அறவிடப்படும் வரியை குறைப்பதற்கு வாய்ப்புகள் உள்ளதா என ஆராயுமாறு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார். 06



# யுத்தத்தின் போது எவருக்காவது அநீதி நடந்திருப்பின் அது தொடர்பில் ஆராய்ந்து செயற்பட அரசு தயார்

## ஜனாதிபதி ஆணைக்குழுவை, அதற்காகவே ஜனாதிபதி நியமித்தார் என்கிறார் அமைச்சர் கெஹெலிய



ஷம்ஸ் பாஹிம்

யுத்தத்தின் போது எவருக்காவது அநீதி நடந்திருந்தால் அது தொடர்பில் செயற்படத் தயாராக இருக்கிறோம். அதற்காகவே ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நியமித்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல கூறினார்.

2010 முதல் 2015 காலப்பகுதியில் காலால் இழுத்தது போன்று இன்று எதிரணி செய்படுவதாக கூறிய அமைச்சர், அரசாங்கம் தனது பொறுப்பை முறையாக நிறைவேற்றுமென்றும் அமைச்சர் கூறினார். அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக மாநாடு Zoom தொழில் நுட்பத்தினுாடாக நேற்று நடைபெற்றது. மனித உரிமை மீறல் தொடர்பான குற்றச்சாட்டு குறித்தும் ஜனாதிபதி நியமித்துள்ள குழுவை எதிரணி நிராகரிப்பது 06

## லயன் வீடுகளுக்கு பதிலாக அதே இடத்தில் புதிய வீடுகள்; அனர்த்த ஆபத்திருப்பின் வேறு இடத்தில்

# பெருந்தோட்டத் தொழிலாளருக்கு பாதுகாப்பான ... பாடு





தோட்ட வீடமைப்பு முறைமை திருத்தத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம்




கே.அசோக்குமார்

பெருந்தோட்டத் ெ... இலக்காகக் கொண்டு... பான வாழ்விடத்தை... தோட்ட வீடமைப்பு... தம் செய்வதற்கு அ... வழங்கியுள்ளது.

திருத்தம் செய்யப்... துள்ள லயன் அறை... இடத்திலேயே புதிய ... வெள்ளம், மண்சரிவு போன்ற அனர்த் ... இரண்டு மாடிகளைக் கொண்ட வீடுகளாக

...வில் நிர்மாணம்;
...வரை வதிவிடம்

...ாணிக்கக் கூடிய வகையில் 550 சதுர ...ளைக் கொண்ட வீட்டின் முதலாம் கட் ...ற்காக 1.3 மில்லியன் ரூபா செலவில் ...ாணித்தல், ...ல்நடை வளர்ப்பு மற்றும் வீட்டுத் தோட்டத்திற்காக மேலதிகமாக 03 பேர்ச்சர்ஸ் காணியை ஒவ்வொரு வீட்டு உரிமையாளருக்கும் வழங்கல்,

வீடமைப்புக்கான பெறுமதியின் 50 வீதத்தை பயனாளிகளிடமிருந்து மீள அறவிடுவதற்கும், அதற்காக 20 வருடகாலம் வழங்குதல்,

லயன் வீடுகள் அமைந்துள்ள இடத்தில் புதிய வீடுகளை நிர்மாணிக்கும் வரையில் வேறு இடத்தில் தற்காலிகமாக வசிப்பதற்குத் தேவையான வசதிகளை வழங்குதல் போன்றவை உள்ளிட்ட 06

# காதி நீதிமன்றம் எனும் பேச்சுக்கே இடமில்லை

## அமைச்சர் சரத் வீரசேகர உறுதி



காதி நீதிமன்றங்கள் தொடர்பில் புதிய அரசியலமைப்பில் நிச்சயமாக மாற்றம் செய்யப்படுமென பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

காதி நீதிமன்றங்களின் வெற்றிடங்களுக்கு காதி நீதிபதிகளை நியமிக்க விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது. இது தொடர்பில் பல்வேறு தரப்பினரும் கருத்து தெரிவித்து வருகின்றனர். பெபிலியான சுனேத்ரா தேவி விகாரையில் நடைபெற்ற 06

# இந்தியாவிலிருந்து நாளை ஐந்து இலட்சம் தடுப்பூசிகள்

- கிடைக்க பெற்றதும் ஏற்றல் ஆரம்பம்
- சுகாதார, பாதுகாப்பு தரப்புக்கு முன்னுரிமை




லோரன்ஸ் செல்வநாயகம்

இலங்கையில் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகளுக்காக இந்தியா அன்பளிப்புச் செய்யும் ஒக்ஸ்போர்ட் எஸ்ட்ரா ஷெனகா தடுப்பூசியை ஏற்றிவரும் விசேட விமானம் நாளை 28ஆம் திகதி மதியமளவில் கட்டுநாயக்கா விமான 06



இந்தியாவின் 72 ஆவது குடியரசு தினம் நேற்று (26) கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான இந்திய இல்லத்தில் கொண்டாடப்பட்டது. இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லே, இந்திய தேசியக் கொடியை ஏற்றிய பின் மரியாதை செலுத்திய போது பிடிக்கப்பட்ட படம்

உலகை உலுக்கும் கொரோனா பாதிப்பு;

# சர்வதேச பாதிப்பு 10 கோடியை தாண்டியது; இலங்கையில் 59,535

## உலக மரணம் 22 இலட்சம்; இலங்கையில் 287



லோரன்ஸ் செல்வநாயகம்

உலகில் கொரோனா வைரஸ் தொற்று நோயாளர்களின் எண்ணிக்கை

21 இலட்சத்து 49 ஆயிரத்து 507 பேர் உயிரிழந்துள்ளனர்.

உலகளாவிய ரீதியில் கொரோனா

# ஐக்கிய ம. சக்தி இனவாத ரீதியில் செயற்படின் வெளியேறுவேன்

## முஜிபுர் ரஹ்மான் M.P மிரட்டல்



ஐக்கிய மக்கள் சக்தி இனவாதமாக செயற்படின் வெளியேருவேன் என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் எம்.பி தெரிவித்துள்ளார்.ஐக்கிய தேசியக் கட்சி இனவாதமற்ற கட்சி. சகல சமூகங்களையும் அரவணைத்து சென்ற கட்சி.

# தினமும் 20,000 PCR பரிசோதனைக்கு திட்டம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு



லோரன்ஸ் செல்வநாயகம்

கொரோனா

14 நாட்கள் தனிமைப்படுத்தல் நிறைவு;

# அங்குனுகொலபெலஸ்ஸ சிறைக்கு மாற்றப்பட்ட ரஞ்சன்

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் 04 வருட சிறைத்தண்டனை விதிக்கப்

